**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.13** |
| **Name** | **:** | **திரு. பிரசன்ன மாதவன்** |
| **Father's Name** | **:** | **லோகநாதன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் ஓய்வுபெற்ற காவல் உதவி ஆய்வாளர். 2011ஆம் ஆண்டு தெள்ளார் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நிலைய குற்ற எண்.204/2011 எண்ணில் சம்பந்தப்பட்ட கண்ணன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக ஆய்வாளர் உடன் பிரேதத்தை சென்னை பொது மருத்துவமனையில் பணி மருத்துவரிடம் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை கொடுத்து பிரேதத்தின் உறவினர்கள் அடையாளம் காட்டிய பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக பணி**

மருத்துவரிடம் ஒப்படைத்து, பிரேத பரிசோதனை செய்தபின்பு பிரேதத்தை பிரேதத்தின் உறவினர்களிடம் ஒப்படைத்தும், பிரேத பரிசோதனையின்போது எடுக்கப்பட்ட உள்ளுறுப்பு மாதிரிகளை பெற்றுக்கொண்டு 11.8.2011ஆம் தேதி சென்னை மயிலாப்பூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து, 12.8.2011 அன்று தெள்ளார் காவல்நிலையம் சேர்ந்து தனி அறிக்கையுடன் ஆய்வாளரிடம் அறிக்கை செய்துக்கொண்டேன். தனி அறிக்கை அ.சா.ஆ.16.

பிரேதத்தில் இருந்த நான்கு முழ ரத்த கறை படிந்த வெள்ளை வேட்டி ஒன்றும், பொடி கலர் சட்டை ஆகியவற்றையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆடைகளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் உள்ளவை தான் அவை. நான்கு முழ ரத்த கறை படிந்த வெள்ளை வேட்டி சான்று பொருள் 4 , பொடி கலர் சட்டை சான்று பொருள் 5. இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.